மணிவாசகம்
சத்தியம் ஒரு தனி
மதத்தின் சொத்தல்ல.
— மகாத்மாகாந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

சாதாரண கிலக வருடம்
ஆடி மாதம் 1-ந் திகதி
(16-7-68)

# வீடமைப்புத் திட்டம்

வீடில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற் முன்னைய அரசாங்கங்களை விட தேசிய அரசாங்கமே பெருமளவில் உதவிபுரிந்து வருவதாகவும் வீடமைப்பதற்கென அதிகமுன் முக்கியம் வருவதாகவும் வீடமைப்பு அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார். வீடமைப்புத் திட்டங்களை காலதாமதமின்றிக் கவனிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் வீடமைப்பு இலாகா பிராந்திய அலுவலகம் ஒன்று திறக்கப்படுமென்றும் உதவிக் கமிஷனர் ஒருவர் விரைவில் இங்கு நியமிக்கப்படுவாரென்றும் அமைச்சர் கூறியிருக்கிறார். இங்கு வரும் அமைச்சர்கள் வாக்குறுதிகளை அளித்துச் செல்வதும் பின்னர் அவற்றை அவர்கள் மறந்துவிடுவதும் வழக்கம். முன்னாள் வீடமைப்பு அமைச்சர் இங்கு வந்து வாக்குறுதிகள் அளித்துச்சென்றது மட்டுமல்ல வீடமைப்புத் திட்டமொன்றுக்கு அத்திவாரக்கல்லும் நாட்டிச் சென்றார். ஒன்றும் செயற்படவில்லை. புதிய அமைச்சர் திரு. ஜயவர்த்தன கொடுத்துள்ள வாக்குறுதி நிறைவேறும் என நம்புவோம்.

உணவு உடை, வசிப்பிடம் மூன்றும் மனிதனுக்கு அத்தியாவசியத் தேவைகளாகும். வசிப்பிடப் பிரச்னை நமது நாட்டில் பெரும் பிரச்னையாக வளர்ந்துள்ளது. இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒவ்வொரு அரசாங்கமும் முயற்சிசெய்து வந்துள்ளபோதிலும் அது தீர்வதாகக் காணவில்லை. வீடமைப்புத் திட்டங்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதற்கென வீடமைப்பு இலாகா மூலமும் வங்கிகள் மூலமும் அரசாங்கங்கள் கடன் வசதி அளித்து வருகின்றன. ஆயினும் இந்த வசதிகளைப்பெரும்பாலும் வசதி படைத்தவர்களே பயன்படுத்திக் கொள்கின்றனர். ஓர் அளவுக்கு நிலமில்லாதவர்களும் நிலம் வாங்கி குடிமனையாவது அமைத்துக் கொண்டு நிம்மதியாக வாழக்கூடிய முறையில் வீடமைப்புத் திட்டங்கள் திருத்தியமைக்கப்படவேண்டும்.

கொழும்பு மற்றும் முக்கிய நகரங்களில் வசதிகுறைந்த நடுத்தர வர்க்கத்தினர் குறைந்த வாடகையில் வசிப்பதற்கென குடியிருப்பு மாடி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அரசாங்கமோ உள்ளூராட்சி மன்றங்களோ இதுபோன்ற குடியிருப்புத் [illegible] இதுவரை [illegible] அமைக்க முன்வரவில்லை.

வீடமைப்புக் கூட்டுத் [illegible] நாபனம் ஒன்றை அரசாங்கம் அமைக்கவிருப்பதால் வசதி குறைந்த மக்களும் நிலம் வாங்கி குடிமனையாவது அமைத்துக்கொள்வதற்கு வசதியும் உதவியும் அளிக்கவும், யாழ்ப்பாணம் போன்ற நகரங்களின் வசதி குறைந்த மக்களுக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் குறைந்த வாடகையில் வீடுகள் கிடைப்பதற்குக் குடியிருப்பு வீடமைப்பு திட்டங்களை அமைக்கவும் வீடமைப்பு அமைச்சரும் அரசாங்கமும் முன்வரவேண்டும்.

# 'பொருளாதாரஸ்திர மின்றி கிராமம் முன்னேறாது'

உடுவில், இங்கள்
உடுவில் கிராமசபையின் புதிய தலைவராக திரு. எஸ். முத்துலிங்கம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். போட்டியின்றி இவர் தெரிவு செய்யப்பட்டார்.

உடுவில் கிராமசபை மண்டபத்தில் நேற்று காலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தலைமையில் இத்தெரிவு நடைபெற்றது.

கிராமசபையின் புதிய உப தலைவராக திரு. வி. சிராஜசிங்கம் தெரிவுசெய்யப்பட்டார். இவர் கிராம சபையின் முதலாம்வட்டார அங்கத்தவராவார். இவரும் போட்டியின்றியே தெரிவுசெய்யப்பட்டார்.

'எம்மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்களை சமாளிக்க பொருளாதார நிலைமை ஸ்திரப்படுத்தவேண்டும். பொருளாதார முன்னேற்றமின்றி கிராம முன்னேற்றம் நடைபெறாது. பொருளாதாரத்துடன் மட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களின் இனத்தின் விடுதலை இயக்கத்திலும் தலையி வேண்டியிருக்கின்றது' என திரு. முத்துலிங்கம் கிராம மக்களுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## சாவகச்சேரி கி. ச. தலைவர்

சாவகச்சேரி, இங்கள்
38 வருடங்கள் தொடர்ந்து கிராமசபையில் அங்கத்தவராக இருந்துவந்த ஓய்வுபெற்ற ஆசிரியரான ஆசிரியமணி திரு. வேலுப்பிள்ளை சுப்பையா, மட்டுவில் சாவகச்சேரி கிராம சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

அடுத்து மட்டுவில் 2ம் வட்டார அங்கத்தவரான திரு. சின்னட்டி சின்னத்துரை உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## 'நாட்டுக்கொரு நல்ல திட்டம்'

யாழ்ப்பாணம், செவ்.
சன்மார்க்கப் பட்டினசபை நூல்நிலையத்தில் சோயா லைகளில் தொடர்ந்து நடைபெற்றுவரும் கருத்தரங்கு வரிசையில் நாளை பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறும் கருத்தரங்கில் 'நாட்டுக்கொரு நல்ல திட்டம்' பற்றி திரு. வ. பொன்னம்பலம் உரைநிகழ்த்துவார்.

## பாப்பு தினவிழா

பண்டத்தரிப்பு. இங்.
பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர்தினவிழா இளவாலையைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பாப்புவின் படம்திரை நீக்கம் செய்யப்பட்டதும் பாடசாலைப் பிள்ளைகளின் அணிவகுப்பு நடைபெற்றது. மாணவ மாணவிகளின் பாட்டு பேச்சு, நடனம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



## "சம்பள நிர்ணய சபையை கூட்டுக"

### சுருட்டுத் தொழிலாளர் கோரிக்கை

நல்லூர், இங்கள்
"யாழ்ப்பாணத்தில் சம்பள நிர்ணயசபையைக் கூட்டுவதற்கு ஒழுங்கு செய்யாததால் சுருட்டுத்தொழிலாளர்களுடைய கூலி உயர்வைச் சட்டரூபமாக்குவதற்கு முடியாமலிருக்கிறது. இதனால் தொழிலாளர்களுக்கு கூலியைக் குறைத்துக் கொடுத்துப் பங்கம் விளைவிக்கும் முதலாளிமார்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியவில்லை"

இவ்வாறு இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்ககூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய திரு. கி. முதலியார்பேசினார்.

அவர் மேலும் பேசுகையில், 7-1-67ல் சம்பள நிர்ணயசபையை கூட்ட ஒழுங்கு செய்யுமாறு தொழில் மந்திரியை கேந்திபடி சங்கம் மகஜர் மூலம் கேட்டிருந்ததாகவும், கடந்த 8 மாதங்களாக அச்சபையைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததாலேயே இவ்விதஷ்டம் அனுபவிக்கவேண்டியிருப்பதாகவும் கூறினார்.

சம்பளநிர்ணயசபையைக் கூட்ட நடவடிக்கை எடுப்பதெனவும், சட்டரூபமாக்கியபின்னர் மேற்படி சங்கம் தீர்மானித்த 13 ரூபாய் கூலியைக் குறைத்துக் கொடுக்கும் முதலாளிமார்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதெனவும் சம்பளநிர்ணயசபையைக் கூட்டி நடவடிக்கை எடுக்கும்வரை மேற்படி சங்கம் வேலைநிறுத்தத்தில் இறங்குவதில்லையெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தொழிலாளர் சட்டங்களுக்கு முரண்பாடாக இயங்கிவரும் சுருட்டுத்தொழிலாளர் ஸ்தாபனங்களை சம்பள நிர்ணய சபையில் அங்கம் வகிக்க அனுமதிக்கப்படாதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## மாணவர்கள் தரிசனம்

கோலை, இங்கள்
கோலை சந்தமரியாள் மகா வித்தியாலய இந்து மாணவர்களும் ஆசிரியர்களும் கடந்த வெள்ளிக்கிழமை கோலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்துக்குச்சென்று கூட்டுப்பிரார்த்தனைசெய்து வழிபட்டனர்: வெற்றோர் ஆசிரியர்சங்கச் செயலாளர் திரு. க. நடராசா இதில் கலந்துகொண்டு பேசுகையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இம் மாணவர்கள் ஆலய தரிசனம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ கதிரேசன் கோவில் பிரதம குருக்கள் பிரமஸ்ரீ அ. கு. [illegible] குருக்கள் விசேட பூசை நடாத்தினார். [illegible] திரு. வ. நடராசாவும் [illegible]

# இம்முறை அஞ்சல் இல்லை

யாழ்ப்பாணம், இங்கள்
மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தேர், தீர்த்த உற்சவ நிகழ்ச்சிகளை இம்முறை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் அஞ்சல் செய்யமாட்டாது.

இம்மாதம் 24-ம் திகதி தேர்த்திருவிழாவும், 25-ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவிருக்கின்றது.

## வீடமைப்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பந்தமான பிரச்னைகளை ஆராய்ந்து நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கவசதி செய்யுமுகமாக ஒரு பிராந்திய அலுவலகம் விரைவில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும். தேசிய வீடமைப்பு உதவிக்கமிஷனர் ஒருவர் இங்கு பிரதம அதிகாரியாக கடமையாற்றுவார்.

வீடமைப்புத் திட்டத்தை ஒரு கூட்டுஸ்தாபனமாக நிறுவுவதற்கும் கடந்த சிம்மாசனப் பிரசங்கத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பலஆயிரக் கணக்கான மக்கள் நன்மை பெறும் இத்திட்டத்தை தேசிய அரசாங்கமே செய்துள்ளது.

அமைச்சரின் நிரந்தரச் காரியதரிசி திரு. மகாதந்தில, உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம், வீடமைப்புக்கமிஷனர் திரு. டி. இராஜேந்திரா, உதவிக்கமிஷனர் திரு. ஜெயவர்த்தன, மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, தலைமைக் காரியாலயக் காரியாதிகாரி திரு. ஏ. கந்தையா, பொதுஜனத்தொடர்பு அதிகாரி திரு. பி. செல்வநாயகம், காரியாதிகாரிகள், மாவட்ட காணி அதிகாரிகள், உட்பட பலர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

தென் கிளிநொச்சியில் சுமார் 3000 மத்திய வருவாயுள்ளவர்களுக்கு 1500 ஏக்கரில் புதிய குடியேற்ற வீட்டுத்திட்டம் அமைப்பது பற்றியும், யாழ்ப்பாணம், சோப்பாய், பருத்தித்துறை, உடுப்பிட்டி, வட்டுக்கோட்டை, உடுவில், காங்கேசன்துறை, ஆகிய தொகுதிகளில் ஹரிஜனங்களுக்கு குடியேற்றம் அமைப்பது பற்றியும் இங்கு நீண்டநேரம் பரிசீலனை செய்யப்பட்டது.

குருநகர், பாஷையூர், நாவாந்துறை புதிய வீடமைப்புத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டபோது பளைப் பகுதியிலுள்ள போக்கறுப்பு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகியஇடங்களில் வசிக்கும் மீனவர்களுக்கும் வீடுகள் அமைத்துக்கொடுக்கவேண்டிய அவசியம் பற்றி பளைப்பகுதி காரியாதிகாரி திரு. அருணாசலம் இங்கு வலியுறுத்தினார்.

அமைச்சரும் அவரது குழுவினரும் நேற்றுமாலை குருநகர், பாஷையூர், நாவாந்துறைப்பகுதி காணிகளை நேரில் சென்று பார்வையிட்டனர். (கா. தி.)

[5-ம் கலத் தொடர்ச்சி]
பவர்கள் எவருக்கு கூடுதலான வருமானம் வருவதைக் கண்டு பயறை கவனியாது விட்டபடியால் யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான கடைகளில் பயறு கிடையாது.

ஆடிப்பிறப்பு வரப்போவதை முன்னேக்குடன் உணர்ந்து பொதுமக்களுக்கு பயறு வழங்கியவிற்பனவு இலாகாவை பாராட்டவேண்டும்.

— வழிப்போக்கன்

# நாட்டிலும் நகரிலும்

இன்று இரண்டு முக்கியமான தினங்கள்.

ஒன்று ஆடிப்பிறப்பு. மற்றது ஜாதிக சம்பத என்ற தேசிய செல்வம் சுவீப் இழுப்பு.

யாழ்நகரின் இருதயபீடமான பெரியகடைச் சந்தியில் நேற்று நடந்து சென்றபோது இவ்விரு தினங்களையும் நினைவூட்டக்கூடிய சம்பவங்கள் நிகழ்ந்தன.

'ஜாதிக சம்பத சுவீப் டிக்கட்' ஒன்றை, நீங்கள் இதுவரை வாங்கிக்கொள்ளாவிட்டால் இப்பொழுதே எமது காருக்கு வந்து ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள், முதலாவது பரிசு இரண்டரைலட்சம் ரூபாய், இரண்டாவது பரிசு ஒன்றரை லட்சம்ரூபாய்... இரண்டு ரூபாய் கொடுத்து லட்சாதிபதியாகுங்கள்' என்று காரிலிருந்து ஒலிபரப்பி கட்டளையிட்டது.

ஒன்றுஇரண்டல்ல, இரண்டரை லட்சம் அலக்கம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்வரை ஆயிரத்து அறுபத்தெட்டு பரிசுகள், யார் வாய்தான் ஊறாது?

இரண்டு ரூபாய் தானே! போனால் போகட்டும் என்று நினைத்து, கடவுள் இப்பொழுதாவது கண்ணைத்திறவாரா என்று நம்பியிருப்பவர்கள் ஒரு மஞ்சள் டிக்கட்டை வாங்கி பக்குவமாக மடித்து பொக்கட்டில் வைத்துக்கொண்டு போகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன் நடைபெற்ற காசி ஜிம்கானா சுவீப்பின் ஞாபகம் வந்தது. இந்த டிக்கட்டும் இரண்டு ரூபாய்தான். அது இப்பொழுது நின்றுவிட்டது.

தேசிய செல்வம் சுவீப் இன்றுமாலை ஹிங்குராக்கொடை என்னுமிடத்தில் நடக்கப்போகிறது. இப்படிப்பட்ட ஒரு பெரிய சுவீப் இழுப்பை ஏன் இந்த நடுக்காட்டில் வைத்தார்களோ என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் முதலிய பெரிய நகரங்களில் வைத்திருக்கலாம். பலருக்கும் வசதியாக இருக்கும்.

எத்தனை இதயங்கள் நாளை சுவீப் முடிவுகளைக் காணத் துடிக்கப்போகின்றன! எத்தனைபேர் இரவிரவாக நித்திரை இல்லாமல் கற்பனவு காணப்போகிறார்கள்! எந்த தப்புண்ணியவாளன் இரண்டரை லட்சாதிபதியாகப் போகிறானோ! எத்தனை பாவிகள் கடைசிஒருஇரண்டாயிரத்து ஐந்நூறுவது வராதா என்று தவிக்கப் போகிறதுகள்!

ஃ ஃ

'உடனே வந்து வாங்குங்கள்' என்ற கட்டளையை பொருட்படுத்தாமல் (பொருட்படுத்த முடியாமல்!) காரைத் தாண்டி மின்சாரவிதி வழியாகப் போனபோது ஒரு கியூ வரிசையின் வால் நடுத்தெருவரையில் வந்து நீண்டுகொண்டிருந்தது. அதன் தலை எங்கே என்று தேடிப் பார்த்தபோது அது விற்பனவு இலாகா கடைக்குள் நுழைவது தெரிந்தது.

கியூவில் நிற்கும் ஒருவரிடம் விசாரித்தேன் சங்கதி என்னவென்று. உள்ளே பாசிப்பயறு கொடுக்கிறார்கள் என்று அவர் தெரிவித்தார். ஒஹோ, ஆடிப்பிறப்பல்லவா என்று கூறிக்கொண்டு நானும் கியூவில் சேர்ந்துகொண்டேன்.

பாயசத்துக்கு சேமியா போல ஆடிக் கூழுக்கு பயறு அவசியமானது. கூழுக்கு மட்டுமல்ல. கொழுக்கட்டை அவிப்பதற்கும் பயறு ஒரு முக்கியமான உபகரணம்.

இது தானிய விநியோ
[6-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்ஸோவில் கூடியுள்ள ஐந்து கி. ஐரோப்பிய நாடுகள்

## செக். அரசியல் நிலைமையே முக்கிய இடம் வகித்தது

வார்ஸோ, ஜூலை 25

போலந்துத் தலைநகரான வார்ஸோவில் நேற்றுக் கூடிய ஐந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மாநாட்டில், செக்கோஸ்லாவாக்கியாவில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் நிலைமையே முக்கிய இடம் வகித்ததாகத் தெரிகிறது.

செக்கோஸ்லவாக்கியாவின் ஆட்சியாளர்கள் எடுத்து வந்துள்ள அண்மைக் கால நடவடிக்கைகளை இந்த ஐந்து நாடுகளின் தலைவர்களும் பரிசீலனை செய்ததாகக் கூறப்படுகிறது.

சோவியத் ரஷ்யா, போலந்து, கிழக்கு ஜெர்மனி, பல்கேரியா, ஹங்கேரி ஆகிய ஐந்து நாடுகளின் கட்சித் தலைவர்களும், பிரதமர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

### அழைப்பு இல்லை

ருமேனியா மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. செக்கோஸ்லவாக்கியாவும் பங்குபற்றவில்லை. இந்த மாநாட்டுக்குத்தான் அழைக்கப்படவில்லை என செக். ரேடியோ அறிவித்துள்ளது.

### போலந்து புகார்

நாட்டிலுள்ள கம்யூனிஸ எதிர்ப்புச் சக்திகளுக்குப் புதிய செக். ஆட்சியாளர், அளவுக்குமிஞ்சிய பொறுமை காட்டிவருவதாகப் போலந்து கம்யூனிஸ்ட் பத்திரிகை செக்கோஸ்லவாக்கியா மீது புகார் கூறியுள்ளது.

### யூகோ. ஆதரவு

ஆனால், யூகோஸ்லாவியப் பத்திரிகையான 'பொலிடிகோ' செக்கோஸ்லவாக்கியாவைப் பயமுறுத்தும் நோக்கத்தைக் கைவிடுமாறு வார்ஸோவில் கூடியுள்ள ஐந்து நாடுகளையும் எச்சரித்துள்ளது.

செக்கோஸ்லவாக்கியாவின் உள் விவகாரங்களில் சோவியத் ரஷ்யா குறுக்கிட முனைவதாகவும் அப்பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

### டிட்டோ கருத்து

பெல்கிரேட்டில், பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசிய யூகோ. ஜனாதிபதி டிட்டோ, 'செக்கோஸ்லவாக்கியாவில் சோஷலிஸம் ஆபத்திலில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

## சோவியத் துருப்புகளின் வெளியேற்றம் தடைப்பட்டது

இதற்கிடையில், செக்கோஸ்லவாக்கியாவிலிருந்து வெளியேறத் தொடங்கிய ரஷ்யத் துருப்புக்களின் முன்னேற்றம் போக்குவரத்து நெருக்கடியினால் தற்போது தடை செய்யப்பட்டுள்ளது.

வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் துருப்புக்கள் நடத்திய போர் ஒத்திகைப் பயிற்சிகளில் கலந்து கொள்ள வந்த இந்த ரஷ்ய துருப்புக்கள், செக்கோஸ்லவாக்கியாவை விட்டு வெளியேறத் தாமதித்தது, செக். மக்களுக்குப் பெரும் கவலை அளித்துவந்ததென்பது வாசகர்கள் அறிந்ததே.

# இந்திய ராஜ்யங்கள் பலவற்றில் கடும் வெள்ளம்

## ராஜஸ்தானில் 23 பேர் பலி

புதுடில்லி, ஜூலை 15

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், கடும் மழை, வெள்ளம் இவற்றின் விளைவான ஆட்சேதம், பொருட்சேதம் பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன.

ராஜஸ்தானில், ஜுன்ஜுனு ஜில்லாவில், வீடொன்று இடிந்துவிழுந்ததால், ஒருவர் உயிரிழந்தார். அந்த ராஜ்யத்தில், வெள்ளத்தினால் உயிரிழந்தோர் தொகை இத்துடன் 23 ஆக உயர்ந்துள்ளது.

இராணுவப் பிரிவினர், மோட்டார்படகு, படகுகள் மூலம் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்திவருகின்றனர்.

கேரள ராஜ்யத்தில், கோழிக்கோடு ஜில்லாவில், வெள்ளத்தில் ஐவர் இறந்தனர்.

மலபார் பகுதியில் பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

... அஸ்ஸாமில், பிரம்மபுத்திர ஆறு பெருக்கெடுத்து ஓடிவருகின்றது.

### கி. பாகிஸ்தானில் 170 பேர் பலி

கிழக்குப் பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் இறந்தோர் தொகை 170க்கும் அதிகம் என மதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மின்சாரம் பாய்ந்து பெண் மரணம்

டில்லியில் நேற்றுப்பலத்த மழை பெய்ததன் விளைவாக மின்சார சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் பாய்ந்ததால், 30 வயதுப் பெண் ஒருவர் மரணமானார். எதிர்பாராத விதமாக அப்பெண், மழையில் நனைந்திருந்த மின்சாரக் கம்பமொன்றைத் தொட்ட போது, மின்சாரம் பாய்ந்தது.

## உஸ்பெகிஸ்தானில் இந்திய ராஷ்டிரபதி

தாஷ்கெண்ட், ஜூலை 15

சோவியத் யூனியனில் தற்போது விஜயம் செய்யும் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின், ஜோர்ஜியக் குடியரசிலிருந்து நேற்று உஸ்பெகிஸ்தான் தலைநகரான தாஷ்கெண்ட் வந்துசேர்ந்தார்.

அவரை விமான நிலையத்தில் வைத்து, உஸ்பெகிஸ்தான் குடியரசின் சுப்ரீம் சோவியத் தலைவரும், மற்றும் மந்திரிகளும், மக்களும் வரவேற்றனர்.

முன்னதாக, ஜோர்ஜியாவில் அளிக்கப்பட்ட விருந்துபசாரமொன்றின் போது பேசுகையில், இந்தியாவிடம் சோவியத் மக்கள் வைத்துள்ள அன்பை இந்திய ராஷ்டிரபதி பாராட்டினார். கைத்தொழில், விவசாயம், கல்வி ஆகிய பல துறைகளிலும் ரஷ்யா இந்தியாவுக்கு அளித்துவரும் உதவிகள், இந்த அன்புக்கு அத்தாட்சியாக விளங்குவதாகவும் டாக்டர் ஹுசெயின் குறிப்பிட்டார்.

## மதங்களிடையே ஒற்றுமை

### கிரி வலியுறுத்தல்

புதுடில்லி, ஜூலை 15

புதுடில்லியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய உபராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி, இந்தியாவிலுள்ள சகல மதத்தினரையும் ஒற்றுமையுடனும், அன்புடனும் வாழுமாறு கேட்டுக்கொண்டார்.

மதங்கள் வேறுபட்டாலும், அவற்றின் இலட்சியம் ஒன்றே என்றார் திரு கிரி. நேர்மை, ஆன்மீக உயர்வு, அச்சமில்லா ஆனந்தம் ஆகிய நிலைகளை அடைவதே இந்த இலட்சியமாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வெள்ளையரல்லா டாக்டர்கள்

### வேலையில் தாமத இயக்கம்

டர்பான், ஜூலை 15

தென்னாபிரிக்காவில், டர்பானிலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் கடமையாற்றும் வெள்ளையரல்லாத டாக்டர்கள், வேலையில் தாமத இயக்கமொன்றை நேற்று ஆரம்பித்தனர்.

வெள்ளையரான டாக்டர்களுக்கு அளிக்கப்படும் சம்பள, வேலை, மற்றும் உரிமைகள் தமக்கும் அளிக்கப்படவேண்டுமென்பதே இந்த டாக்டர்களின் இயக்கத்திற்குக் காரணமாகும்.

## 17-ம் திகதி நடைபெறும்

சுழிபுரம், திங்கள்

அகில இலங்கைத் தமிழ் பேசும் உதைபந்தாட்ட அதிபர்கள் வருடாந்த மாநாடு கொழும்பு தபால் தந்தி தலைமைக் காரியாலயத்தில் இம்மாதம் 17-ந்திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கின்றது. இம்மாநாட்டில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் கலந்துகொள்வார்.

## ஈரானில் தேசாய்

டெஹரான், ஜூலை 15

இந்திய துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்று ஈரான் தலைநகரான டெஹரான் வந்துசேர்ந்தார்.

அவர், ஈரான் பிரதமரையும், பிற மந்திரிகளையும் சந்தித்துப்பேசினார்: இரு நாடுகளுக்கிடையே நிலவும் உறவுகள், பொதுப் பிரச்சினைகள் இவைபற்றியே பேச்சுவார்த்தைகள் நடந்தன.

# பாகிஸ்தான் மாணவர்கள் லண்டனில் மோதல்

லண்டன், ஜூலை 15

நேற்று, லண்டனிலுள்ள பாகிஸ்தான் தூதரகக் கட்டிடத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்த இரண்டு போட்டிப் பாகிஸ்தான் மாணவர் கோஷ்டிகளிடையே ஏற்பட்ட மோதலைத்தொடர்ந்து, அவர்களைக் கலைத்து அங்கு அமைதியை நிலைநாட்டப் பொலிஸார் அழைக்கப்பட வேண்டி ஏற்பட்டது.

கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த சுமார் 200 மாணவர்கள், பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானை எதிர்த்து கோஷமிட்டனர். மற்றொரு மாணவர் கோஷ்டி அவருக்கு ஆதரவாகக் கோஷமிட்ட போது, இரு சாராருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. பின்னர், பொலிஸார் வந்து, நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

கிழக்குப் பாகிஸ்தானில், அரசியல் தலைவர்கள் கைது செய்யப்படுவதையும், அரசியல் சுதந்திரம் மறுக்கப்படுவதையும் ஆட்சேபித்தே கிழக்குப் பாகிஸ்தான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியதாகக் கூறப்பட்டது.

# பாரிஸில் பொலீஸாரும் மாணவரும் மோதினர்

பாரிஸ், ஜூலை 15

பாரிஸில், பிரெஞ்சு மாணவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே சிறு சிறு மோதல்கள் நேற்று இரண்டாவது தினமாகத் தொடர்ந்து நடைபெற்றன.

பாரிஸ் நகரின் லத்தீன் பகுதியிலேயே இம் மோதல்கள் பெரும்பாலும் நடந்தன.

மாணவர்கள், பொலிஸார் மீது போத்தல்களை எறிந்தனர். அவர்களைக் கலைக்க பொலிஸார், கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

இந்த மோதல்களில் சிலர் காயமடைந்தனர். சில மாணவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

சைகோனில்

# அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி கிளிபோர்ட்

சைகோன், ஜூலை 15

அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி திரு. கிளார்க் கிளிபோர்ட், தாம் பதவியேற்ற பிறகு முதற் தடவையாக நேற்றுத் தென் வியட்நாம் வந்து சேர்ந்தார்.

அவர் தென் வியட்நாமில் தங்கியிருக்கும் நான்கு நாட்களில், தென் வியட்நாம் ஜனாதிபதியுடனும் தென் வியட்நாமிலுள்ள அமெரிக்க இராணுவத் தலைவர்களுடனும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

ஹோனலுலுவில் விரைவில் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனுக்கும் தென் வியட்நாம் ஜனாதிபதி திரு தியூவுக்குமிடையேயான சந்திப்புக்கு முன்னேற்பாடாகவே திரு. கிளிபோர்டின் பேச்சுவார்த்தைகள் அமையும்.

# திருச்சியில் தீ விபத்து

## ஐவர் மரணம்; 250 வீடுகள் நாசம்

திருச்சி, ஜூலை 15

நேற்றுத்திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ஒரு தீ விபத்தில், ஐந்து பேர் உயிரிழந்தனர். மற்றும் 6 பேருக்குத் தீக்காயங்கள் ஏற்பட்டன.

நேற்றைய தீவிபத்தில், 250 குடிசைகள் தீக்கிரையாகின. 600 கால்நடைகள் மரித்தன.

நகரசபைத் தீயணைக்கும் படையின் நான்கு பிரிவுகள் பல மணி நேரமாகத் தீயுடன் போராடி அணைத்தன.

## 'அரசாங்கம் கவனிக்க வேண்டும்'

யாழ்ப்பாணம், செவ்.

"தொழில் இலாகா உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்தத்தால் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் பல இரவு 10 மணி வரையும் திறந்து வைத்திருக்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது தொழிலாளர்களே. இதனைக் கண்காணிப்பதற்கு எமது சங்கத்தில் 3 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளோம். அரசாங்கமும் இது விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்."

இவ்வாறு வடமாகாண சிகையலங்கரிப்பாளர் முன்னேற்றசங்கக் கூட்டத்தில் தலைவர் திரு. சி. விஸ்வலிங்கம் பேசுகையில் கூறினார். நிர்வாக சபைத் தலைவராக திரு. நா. கணபதிப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

லண்டனில்

## ஜப்பானிய வெளியுறவு மந்திரி

லண்டன், ஜூலை 15

லண்டன் வந்துள்ள ஜப்பானிய வெளியுறவு மந்திரியான திரு. மிக்கி, பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரியான திரு. ஸ்டூவார்ட்டுடன் இன்று தமது பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கிறார்.

தென்கிழக்காசியா, மேற்கு ஆசியா, ரொடீஷியா ஆகிய பிரச்னைகள் இவர்களது பேச்சுவார்த்தைகளில் முக்கிய இடம் வகிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சைக்கிள் திருட்டு

வவுனியா, ஞாயிறு

வவுனியாவில் சைக்கிள் திருட்டு அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 6 சைக்கிள்கள் களவு போயுள்ளதாம். வவுனியாப்பொலிஸார் சைக்கிள் திருட்டை முறியடிப்பதற்கு தீவிரமுயற்சி செய்துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விஞ்ஞானம்

# பூமியின் வயதென்ன?

நமது பூமியின் வயதென்ன? எத்தனை எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் இது தோன்றிற்று?— இப்படியான கேள்விகள் உங்கள் மனதில் தோன்றுகின்றன அல்லவா,

உலகு தோன்றிய நாள் தொட்டு இன்றளவுள்ள காலகட்டத்தைப் பத்துப் பகுதிகளாகப் பிரிக்கின்றனர் விஞ்ஞானிகள். ஒவ்வொரு பகுதியிலும் அதற்கே உரித்தான பிராணிகளும், தாவரங்களும் வாழ்ந்துள்ளன. எனினும் ஒவ்வொரு பகுதியின் ஆண்டுகள் எத்தனை என்று கண்டுபிடிப்பது எப்படி?

ஆங்கில விஞ்ஞானியான ஏஹோம்ஸ் என்பவர் 60 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள காலங்களை வரையறுத்தார். இதற்குப் பின்னர் சோவியத் விஞ்ஞானிகள் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளைச் செய்துள்ளனர்.

விஞ்ஞானிகள் பி. செல்லர், ஜி. அஸோக்கோவ், ஐ. ஸிப்லாவ் — போன்ற சோவியத்புவியியலாளர்கள் நவீன பௌதிக முறைகளைக் கொண்டு மலைநில ஆய்வுகள் இப் பூமியில் தோன்றியது 170 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் என்று நிர்ணயித்தனர். பேராசிரியர் இ கர்லிக் என்பவர் சில பாறைப் படிவங்களை ஆராய்ந்து அவற்றின் தோற்றம் 1000 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் என்று கூறுகிறார். பல விஞ்ஞானிகள் பூமியின் வயது 500 கோடி என மதிப்பிட்டனர். பேராசிரியர் கர்லிக்கின் கண்டுபிடிப்பு இவைகளை விட இரட்டிப்பாக உள்ளது ஆயினும் பௌதிகத்தின் உதவியுடன் மிகச் சரியாக பூமியின் வயதை விஞ்ஞானிகள் கணக்கிடுவர் என்பதில் சந்தேகமில்லை.

## உங்கள் கடிதம்

மாணவர்கள் படித்துப் படித்துச் சிந்திக்க கணேஷின் 'ஒரு படி உயர்வோமா' அருமையான ஒரு கட்டுரை. தொடர்ந்து வெளியிடுங்கள். மாணவ உலகம் உங்களுக்கு நன்றியுள்ளதாயிருக்கும்.

செல்வி சந்திராதேவி
சின்னத்துரை,
(அங். இல. 25)

'மூளைக்கு வேலை' பகுதியை மீண்டும் ஆரம்பிப்பதாகக் கூறி ஏமாற்றிவிட்டீர்களே! எம்போன்ற மாணவர்கள் பங்கு பற்றி பயன் பெற 'மூளைக்குவேலை' பகுதியை ஆரம்பிப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

செல்வி காந்தி வேலுப்
பிள்ளை,
(அங். இல. 16)

குறிப்பு: இதுபோன்ற விண்ணப்பங்களைப் பலர் விடுத்திருக்கின்றனர். விரைவில் இப்பகுதியை ஆரம்பித்து அங்கத்தவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்வோமென உறுதி கூறுகிறோம்.

## 'மாணவர்மலர்' அங்கத்தவர் பத்திரம்

பெயர்: ____________________

வயது: ____________________

பாடசாலை: ____________________

முகவரி ____________________

____________________

வகுப்புஆசிரியர் கையொப்பம்

## பொறுக்கிய முத்து



நிதானம் மட்டும் இருந்தால் போதாது! அடக்கமும் அவசியம். அடக்கம்என்பதுநமது நாகரீகத்தின் அளவு கோல் ஆகும்.

— நேருஜி

## 'ஒரு படி உயர்வோமா?'

கணேஷ் தொடர்ந்து எழுதிவரும் 'ஒரு படி உயர்வோமா?' கட்டுரை அடுத்த வாரம் வெளிவரும்.

## பயம்!

குதிரை வண்டிக்குள் தந்தையோடு உட்கார்ந்திருந்த பின்னை, இன்னொரு வண்டி தன் வண்டியை முந்திக் கொண்டு ஓடுவதைப் பார்த்து விட்டுச் சொன்னான்:

"அப்பா ..... அப்பா ..... எங்களுடைய வண்டியை அந்த வண்டி முந்திக் கொண்டு ஓடுது ..."

"முந்திக் கொண்டு போகவில்லைடா! எங்களுடைய குதிரையைப் பார்த்த அந்தக் குதிரை பயந்து ஓடுது!"

# புற்று நோய் பற்றி ஓர் ஆராய்ச்சி

நோய்க்கும் அது தோன்றும் பிரதேசத்திற்கும் தொடர்புண்டா? உண்டு என்பதுதான் ஆராய்ச்சி தரும் பதில்!

இந்தியாவில் வாய்ப்புற்று நோய் அதிகமாகவும், ஆஸ்திரேலியாவில் தோல் புற்று நோயும், ஜப்பானில் இரைப்பை புற்றுநோயும் அதிகமாகக் காணப்படுகிறது.

தாஜிக்கிஸ்தானிலுள்ள பல புற்றுநோய் கொண்டோரையும் சோதனை செய்ததில் சூரியனிடமிருந்து மறைக்கப்படாத பகுதிகளிலேயே தோல் புற்றுநோய் தோன்றுகிறதெனத் தெரியவந்துள்ளது.

ஜப்பானில் தலைமுறை தலைமுறையாக பலகுடும்பங்களிலும் வயிற்றுக்கோளாறுகள் உள்ளன. இதற்குக் காரணம் அந்நோய்கள் பாரம்பரிய நோய்கள் என்பதனால்ல. ஒருவேளை அரிசி சமைக்கும் முறையில் ஏதேனும் கோளாறுகள் இருப்பதாலும் வழிவழியாக அதே

(6ம் பக்கம் பார்க்க)

## பரிசுப் போட்டி—2 இதோ முடிவு!

நூற்றுக்கு அதிகமானோர் இந்தப் பரிசுப் போட்டியில் கலந்து கொண்டார்கள். அறுபதுவீதமானோர் சரியான விடையை எழுதியிருந்தார்கள். 'மாணவர் மலர்' அங்கத்தவர்களாகச் சேராதவர்களின் விடைகள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

பரிசுப்போட்டி 2-ன்பத்து ரூபாவைப் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி இவர்தான்.

செல்வி சே. இன்பமாலா
உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இவ

[6-ம் பக்கம் பார்க்க]


சந்தனம்

கோயில் தேவைகளுக்கும்
மங்கள வைபவங்களுக்கும்
இயந்திரத்தினால் அரைத்த
பச்சை சந்தனம்
எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

கவனம் ! கவனம் !! கவனம் !!!

விலை குறைவென நினைத்து நிறையை குறைத்து வாங்காதீர்கள்!
விலை குறைத்துச் சொன்னால் நிறை குறைத்தே தருவார்கள் என்பதை மறவாதீர்கள்

உங்கள் கட்டிடங்களுக்குத் தேவையான
★ இரும்புக் கம்பி வகைகள்
★ இரும்புச் சலாகை வகைகள்
★ பூட்டுப் பிணைச்சல் வகைகள்
மற்றும்
உங்கள் கட்டிடங்களுக்குத் தேவையான எல்லாச் சாமான்களும் நிதானமான விலையில் பெற்றுக்கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்

"ஸ்டீல் சன்ஸ்"

('குரங்கு மார்க்' மண்வெட்டிகளுக்கு, இலங்கையின் ஏகவிநியோகஸ்தர்கள்)
289, ஸ்ரான்லி ரேட் — — — யாழ்ப்பாணம்.
போன்: 7035


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

**வீடு:**
காங்கேசன்துறை வீதியில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்கும் நட்டாதெருவுக்கும் இடையில் உள்ள வீடு வாடகைக்கோ, விலைக்கோ தேவை. காங்கேசன்துறை வீதியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் விரும்பத்தக்கது.— விளம்பர இலக்கம் 1242, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1242

**விகிதர்கள்**
யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்கு இரு விகிதர்கள் தேவை. யாழ்ப்பாணப்பட்டினத்தின் மூன்று கட்டைச் சுற்றளவுக்குள் இருப்பவர்கள் வயது 18-க்கு இருந்து 30 வரை, ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் தேவை. கணக்குப் பதிவு செய்வதில் ஓரளவு பயிற்சியுள்ளவர்கள், தமிழ் ஆங்கில எழுத்துக்களை அழகாக எழுதக் கூடியவர்களுக்கு விசேஷ சலுகையுண்டு. தெரிவு செய்யப்படுபவர் பிணைப்பணம் செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர் தமது சொந்தக் கையெழுத்தில் சகல தராதர. நற்சாட்சிப்பத்திரத்துடன் 31-7-68 முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 1232, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 1232

**வீடு**
யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் தண்ணீர், மின்சார வசதிகளுடன். தனிக் குசினியுடன் வீட்டின் ஒரு பகுதி அல்லது சிறிய வீடு உடனடியாகத் தேவை. துரைசிங்கம் 149, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 1233

யாழ்ப்பாணப் பட்டினத்தில் தனியார் ஆஸ்பத்திரிக்கு உதவி ஆட்கள் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடிய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இலக்கம் 1244, 'ஈழநாடு' மேற்பார்த்து யாழ்ப்பாணம். 1244

### விற்பனைக்கு

**காணி**
12 1/2 பரப்பு பனைக்காணி விற்பனைக்கு கோண்டாவில் கிழக்கில் இருக்கின்றது விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் விலாசம்: திருமதி அ. நிலாகராசா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1222

**கடைச்சல் மிஷின்**
தனிப்பாவிப்பிலுள்ள 8 அடி நீள R. K. "லேபிலைட்" அமெரிக்க கடைச்சல் மிஷின் நல்ல நிலையில் சகல தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பத்மா தொழிற்சாலை, 28, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1238

### வாடகைக்கு

ஆறு அறைகளும், கார் கராச்சும், மின்சார, பைப் தண்ணீர் வசதிகளும் கொண்ட வீடு ஒன்று யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கு முன்பாக ஆகஸ்ட் மாதம் முதல் வாடகைக்குண்டு 60, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 1236

## கண்டி பெரஹரா

கண்டி, திங்கள்
கண்டி எசல பெரஹரா இம்மாதம் 31 திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட மாதம் 10ம் திகதி முடிவடையும். களியாட்டு விழாவை இம்முறை போகம்பரை மைதானத்தில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில்
## ஹொக்கிப் பயிற்சி

யாழ்ப்பாணம், செவ்.
இலங்கை ஹொக்கிக் கோஷ்டியின் பயிற்சியாளரான திரு. ந்தோனி அபயசிங்கா, விளையாட்டு அமைச்சின் ஆதரவில் யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கல்லூரிகளின் ஹொக்கிக் கோஷ்டியினருக்கு தற்போது பயிற்சி அளித்து வருகிறார். [தே. நி]

## காணவில்லை

13-7-68 வியாழன் பிற்பகல் 5 மணியளவில் ஸ்ரான்லி வீதி, எம். டி. குணசேன புத்தகசாலை முன்பு வைக்கப்பட்ட என்னுடைய சைக்கிள் சக்கரவண்டியைக் காணவில்லை, அவ்விடத்தில் வேறு ஒரு வண்டி காணப்பட்டது. இதுபற்றி புத்தகசாலையுடன் தொடர்புகொள்க. சி. பரமானந்தம். 25/3, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் 1581

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 16—7—68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 ஐதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைக்கோவை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்
பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்தநின வாழ்த்துக்கள். 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 நேயர்விருப்பம், 6-45 பாவனம் 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு — லீலாவதி சண்முகதாஸ், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பாட்டு — பரம்சிங்கராசா.

## யாழ். நகரில் அகிலஇலங்கை பாடசாலைகள் விளையாட்டுப்போட்டி

### கல்வி அமைச்சர் தலைமையில்

யாழ்ப்பாணம், செவ்.
அகில இலங்கை மத்திய மகா வித்தியாலயங்கள், மத்திய மகா வித்தியாலயங்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 21-ம், 22-ம் திகதிகளில் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில் அகில இலங்கைப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கு அதிகமான வீரர்கள் பங்கு பற்றுவர். [தே. நி]

## ஸ்ரார் சாம்பியன்

காங்கேசன்துறை, திங்.
தெல்லிப்பழை ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் காங்கேசன்துறை மூன்றக் கேஸ் கழகத்துக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் பிரிவுச் சாம்பியனாகியது. காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இப்போட்டிக்கு திருவாளர்கள் கு. தனபாலசிங்கம், சோ. ஆனந்தராசா மத்தியஸ்தம் வகித்தனர்.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**





# இன்றைய விலைமதிக்கமுடியாத பரிசு: புத்தம் புதிய கார்

என்றாலும், 50 சதத்துக்கே உங்களுக்குக் கிடைக்கலாம். மேலும், பெருந்தொகையான பணத்துக்குக் காசோலையும் கிடைக்கும்!

தேசிய லொத்தர் டிக்கெற் வாங்கினால் மட்டும் இது உங்களுக்குக் கிடைக்கும். ஆம், நீங்களும் புத்தம் புதிய கார் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்.

சீட்டிழுப்பு இல. 203. தேதி: 18-7-68- புத்தம் புதிய ரெனோல்ட் 16 கிராண்ட் லுக்ஸ் கார் ரூபா 25,254/- *



சீட்டிழுப்பு இல 204. தேதி: 25-7-68- புத்தம் புதிய ரொயோட்டா கொரொனா கார் ரூபா 14,750/-*

*தீர்வை உட்பட இவைக்கான வழமையான கொம்பனி விலைப் பட்டியலில் அடங்கியுள்ளது.

இந்தக் கார்களை கொள்முதல் செய்வதாக இருந்தால் சீட்டிழுப்பின் 14நாட்களுக்குள்ளாகவே செல்லுபடியாகும்.



இன்றே ஒரு தேசிய லொத்தர் டிக்கெற் வாங்குங்கள்!

AJNs.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடச் செல்வதை தடுக்க கூடாதென உத்தரவு

## தடையுத்தரவு பற்றிய விசாரணை நாளை மறுதினம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தடை உத்தரவு விசாரணை முடியுமட்டும் வாதியான சின்னப்பு கணேசன் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் (மூலஸ்தானம், அர்த்தமண்டபம் தவிர) வழிபடச் செல்வதைப் பிரதிவாதியான சி. சுந்தரலிங்கம் தடைசெய்யக்கூடாது என யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஜனாப் ஐ. எம். இஸ்மயில் நேற்று உத்தரவிட்டார்.**

அரியாலையைச் சேர்ந்த கணேசன் நேற்று முன்தினம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் தாக்கல் செய்த மனு பற்றிய விசாரணை நேற்றுக் காலை 11 மணிக்கு ஆரம்பமானது.

கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். வாதியான சின்னப்பு கணேசனும், பிரதிவாதியான சி. சுந்தரலிங்கமும் கோர்ட்டிற்கு வந்திருந்தனர்.

வாதி சி. கணேசன் சார்பில் அட்வகேட் எஸ். கதிரவேற்பிள்ளையும், பிரதிவாதி சி. சுந்தரலிங்கம் சார்பில் அட்வகேட் சி. பொன்னம்பலமும் கோர்ட்டில் சுமார் அரைமணி நேரம் சட்டப் பிரச்னை சம்பந்தமாக தங்கள் வாதங்களை எடுத்துரைத்தனர்.

வாதியான கணேசன் தன் மனுவில், மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள் வழிபடச் செல்லும்போது பிரதிவாதியான சி. சுந்தரலிங்கம் தடுத்தாரென்றும் அவருக்குத் தடுக்க உரிமையில்லையென்றும், கோவிலுக்குள் சென்று வழிபட உத்தரவு வழங்கப்படவேண்டுமென்றும் கோரியிருந்தார்.

பிரதிவாதியான சி. சுந்தரலிங்கம் தாக்கல்செய்த எதிர்மனுவில், ஆலயத்தின் உட்பிரகாரத்திற்குள் பிரவேசிக்கும் உரிமை வாதியான கணேசனுக்குக்கிடையாதென்றும்வாதி உட்பிரகாரத்திற்குள் பலாத்காரமாக பிரவேசிக்கமுயன்றபோது பிரதிவாதி அப்படி செய்ய வேண்டாமென சட்டபூர்வமாகக் கோரியதாகவும், மனுவை தள்ளுபடிசெய்யும் படியும் கூறப்பட்டுள்ளது.

விசாரணையின் பின் மாவட்டநீதிபதி தமது தீர்ப்பில் கூறியதாவது: மனு செய்தவர் (கணேசன்) இந்துவென்றும், மாவிட்டபுரம் கோவில் பொதுக்கோவில் என்றும் கோவிலில் தான் 20 வருடகாலம் உள்சென்று வழிபட்டு வந்தாரென்றும், அப்படி வழிபடத் தனக்கு உரிமையுண்டென்றும் கூறியுள்ளார். ஜூலை 1ந் திகதி இறை வழிபாட்டிற்காக தான் அங்கு சென்றபோது கோவில் முன்றலில் சி. சுந்தரலிங்கம் தடுத்ததாகவும் கூறியுள்ளார். எதிர மனுதார் தடுத்தது தவறானது, சட்டவிரோதமானது என்றும் கூறியுள்ளார். ஆனால் எதிர்மனுதார் [சி. சுந்தரலிங்கம்] மறுமொழி அனைத்திருக்கிறார்.

எதிர்மனுதார் [சி. சுந்தரலிங்கம்] இக்கோவிலின் எதுவித சம்பந்தமும் உடையவராகத் தோன்றவில்லை. அவர் இக்கோவிலின் தர்மகர்த்தாவாகவோ, கோவில் பிரதிநிதியாகவோ சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. அவரின் மறுமொழியை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

எதிர்மனுதாருக்கு அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. இதுபற்றிய விசாரணை இம்மாதம் 18-ந் திகதி காலை நடைபெறும்.

மனுதாரரான கணேசன் சார்பில் அட்வகேட் எஸ். கதிரவேற்பிள்ளை, அட்வகேட் எஸ். பொன்னையா ஆகியோர் புறக்டர் எஸ். மகாதேவாவின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

எதிர்மனுதாரரான சி. சுந்தரலிங்கம் சார்பில் அட்வகேட் மி. சோமசேகரம், அட்வக்கேட் எஸ். ஆர். கனகநாயகம், அட்வக்கேட் சி. பொன்னம்பலம் ஆகியோர் புறக்டர் ஏ. சண்முகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

## கைகளைக்கட்டி திருட்டு

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தில் ஒரு வீட்டில் களவாடச் சென்றவர்கள் வீட்டுக்காரரின் கைகளைக் கட்டிவிட்டுத் திருட முயன்றுள்ளனராம். கிளிநொச்சிப் பொலிசாருக்குச் செய்த புகாரைத் தொடர்ந்து இது சம்பந்தமாக இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## இன்று கலைவிழா

சுழிபுரம், செவ்.

சங்கானை மேற்கு [வடலிஅடைப்பு] சன சமூக நிலையத்தினர் இன்று மாலை நிலையத் திருக்கருமையிலுள்ள திறந்தவெளியரங்கில் கலைவிழாவை நடாத்துகின்றனர்.

## பொலிசார் .... !

[1ம் பக்கத் தொடர்ச்சி] ஹரத் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனைசெய்தார்கள்.

மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று வழங்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்து இம்மகாநாடு நடைபெற்றது.

## புற்று...

[4-ம் பக்கத் தொடர்ச்சி] முறை கடைப்பிடிக்கப் படுவதாலும் அப்படி ஏற்படக்கூடும்.

எனவே, மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு தெரிந்து கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நோயிலிருந்து விடுதலை பெறுவது சுலபம்.

—பேராசிரியர் அலெக்ஸாண்டர் சாக்லின்

## பரிசு...

(4ம் பக்கத் தொடர்ச்சி) ருக்கு நமது வாழ்த்துக்கள்.

பரிசுப் போட்டி — 3 எப்போது என்று கேட்கிறீர்கள். அப்படித்தானே!

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—பாம


வின்ஸர்
சிவாஜி கணேசன்
சௌகார் ஜானகி
நடித்த
படிக்காதமேதை

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45 p.m.
Mickey Rooney
in
24 Hours to kill

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Tony Curtis
Claudia Cardinale
in
DON'T MAKE WAVES

5-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி
[கொழும்பு]
2.00 மாலை 6.00, 9.30
இந்திய ஜனாதிபதி பரிசு பெற்ற சிறந்தபடம்.
காதல் மன்னன்
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ்
நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு

மானிப்பாய்
வெஸ்லி
தினசரி 6-30, 9-30.
பிரீ பேயா, போயா 2-30
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
முகராசி

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.
ஜேம்ஸ்பொண்ட்
★ ஜெய்சங்கர்
★ எல் விஜயலக்ஷ்மி
★ மனோகர்
நடித்த
வல்லவன் ஒருவன்



ராஜா (யாழ்ப்பாணம்) 2-30, 6-30, 9-30
ஜெஸிமா (கொழும்பு) 2-00, 6-00, 9-30
சாந்தி (மட்டுநகர்) 6-30, 9.30
சிகிரி (சுடுகன்னோட்டை) 2-30, 6-15, 9-30
ரோகிணி (அடம்பன்) 6-30, 9-30
ராஜ் (கல்முனை) 6-30, 9-30
ரகுநாத்—சந்திரகலா
தங்கவடிவேல்
மற்றும் இலங்கைக் கலைஞர்கள்
நடித்த
நிர்மலா
நடிகமணி V. V. வைரமுத்து கோஷ்டியினரின்
''ஹரிச்சந்திரா மயானகாண்டம்''
நாடகம் இப்படத்திற்குப் புதுமெருகூட்டுகிறது.
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org